# ஆட்டோ ஓட்டுனர்களுக்கு இன்சூரன்ஸ் பாலிசி

**தாம்பரம்**

தாம்பரம் இந்துமிஷன் மருத்துவ மனையில், ஆட்டோ ஓட்டுனர்களுக்கான இலவச மருத்துவ முகாம் நடந்தது.

இதில், ஆட்டோ ஓட்டுனர் களுக்கு இலவச இன்சூரன்ஸ் பாலிசி வழங்கப்பட்டது.

63வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தாம்பரம் இந்துமிஷன் மருத்துவமனை, இநோடா என்ற சமூக நல அமைப்பும் இணைந்து ஆட்டோ ஓட்டுனர்களுக்கான இலவச மருத்துவ முகாமை நேற்று நடத்தின.

மருத்துவமனை செயலர் டி.கே. சீனிவாசன் வரவேற்றார். முகாமை துவக்கி வைத்து, புறநகர் போலீஸ் கமிஷனர் ஜாங்கிட் பேசுகையில், 'ஆட்டோ ஓட்டுனர்கள் நேரம் பார்க்காமல் பணியாற்றுகின்றனர். இதனால், அவர்களுக்கு பல பிரச்னைகள் ஏற்படுகிறது.

இந்த இலவச மருத்துவ முகாம் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்துமிஷன் மருத்துவ மனை பொதுமக்களுக்கு சிறந்த சேவை செய்து வருகிறது.




தாம்பரம் இந்துமிஷன் மருத்துவமனையில் நடந்த ஆட்டோ ஓட்டுனர்களுக்கான இலவச மருத்துவ முகாமில், புறநகர் போலீஸ் கமிஷனர் ஜாங்கிட் கலந்து கொண்டு, ஆட்டோ டிரைவர் ஒருவரின் மனைவிக்கு இன்சூரன்ஸ் பாலிசியை வழங்கினார். உடன், மருத்துவமனை செயலர் டி.கே.சீனிவாசன்.

ஆட்டோ ஓட்டுனர்களுக்கு எந்த தகவல் கிடைத்தாலும் உடனடியாக தெரிவிக்க வேண்டும்' என்றார்.

முகாமில், இநோடா நிறுவனத் தலைவர் நாராயணன், ஆட்டோ ஓட்டுனர்கள், டாக்டர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். மேலும், ஆட்டோ ஓட்டுனர்களுக்கு, 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள விபத்து இன்சூரன்ஸ் பாலிசி இலவசமாக வழங்கப்பட்டது.